**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No. 1/2024</u>**

**<u>நாள் : 18.11.2025</u>**

**ம.சா.** 1 திருமதி.ராதா, க/பெ.கோவிந்தன்

**சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 3ஆம் எதிர்மனுதாரரான அரசு பேருந்தில் பயணித்தபோது பேருந்தானது நின்றுக்கொண்டிருந்த கண்டெய்னர் லாரிமீது மோதியதால்தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் டிரைவர் சீட்டுக்கு எதிரே உள்ள சீட்டில் 4 சீட் தள்ளி உட்கார்ந்திருந்தேன். விபத்து நடந்த நேரம் விடியற்காலை 5.30 மணி இருக்கும். நான் ஆம்பூரிலிருந்து வேலூர் சென்று கொண்டிருந்தேன். நான் பேருந்தில் பயணித்ததற்கான பயணச்சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆம்பூரிலிருந்து வேலூர் செல்லும் சாலையானது நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் ஒரே நேரத்தில், ஒரே திசையில் 3 கனரக வாகனங்கள் செல்லலாம் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் அந்த சாலையில் இரண்டு வாகனங்களை தவிர வேறு எந்த வாகனங்களும் செல்லவில்லை என்றால் சரிதான். பேருந்து ஓட்டுநர்தான் தூக்க கலக்கத்தில் பேருந்தை இயக்கி நின்றுக்கொண்டிருந்த கன்டெய்னர் லாரிமீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. கன்டெய்னர் லாரி ஓடிக்கொண்டுதான் இருந்தது, ரெட் சிக்னல் எதுவும் போடவில்லை, திடீரென்று கன்டெய்னர் லாரி நின்றுவிட்டது அப்போதுதான் விபத்து நடந்தது. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தூக்க கலக்கத்தில் இருந்ததால் விபத்து நடந்த விதம் பற்றி என்னால் கூற இயலவில்லை என்றால் சரியல்ல. நான் அப்போது விழித்துக் கொண்டேதான் இருந்தேன். நான் பயணித்த அரசு பேருந்தின் நடத்துநர், விபத்து சம்பந்தமாக கொடுத்த புகாரில் கன்டெய்னர் லாரி நின்றுக் கொண்டிருந்ததாகத்தான்

சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்திற்கு பின்னிட்டு எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு சிஎம்சி மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சிஎம்சி மருத்துவமனை மருத்துவ பில்கள் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயமானது முழுமையாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல, எனக்கு எந்த ஒரு நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு ஆட்டோவில் போனேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 பில்கள் வழக்கிற்காக பெறப்பட்டவை என்றால் சரியல்ல. ஆட்டோவில்தான் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு போகும்போதும் ஆட்டோவில்தான் போனேன். ஆகஸ்ட் 1ஆம் தேதி டிஸ்சார்ஜ் ஆகும்போது காரில் வந்தேன். அதற்கு பின்னிட்டு 6, 7 முறை மருத்துவ ஆலோசனைக்காக போகும்போது 4 பேர் செல்லக்கூடிய காரில்தான் போனேன். ஆம்பூரிலிருந்து கார் எடுத்துக்கொண்டு போனேன். எனக்கு எந்த தொழிலும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காகவேண்டி இழப்பீடு பெறும் நோக்கில் காய்கறி வியாபாரம் செய்து வந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது 3ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வகையில் 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**3ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் அரசு பேருந்தில் ஆம்பூரிலிருந்து வேலூரை நோக்கி பயணித்தேன். கீழ்மொனவூர் அருகே விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் அரசு பேருந்துக்கு முன்பாக கன்டெய்னர் லாரி சென்றது என்றால் சரிதான். மேற்படி லாரி திடீரென சிக்னல் எதுவும் போடாமல் நிறுத்தியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து குறித்து விரிஞ்சிபுரம் காவல் நிலைய போலீசார் கன்டெய்னர் லாரி ஓட்டுநருக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு

செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தானது கன்டெய்னர் லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் லாரியின் உரிமையாளரும், லாரி காப்பீடு எடுத்துள்ள நிறுவனமும்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரிதான். நான் பயணித்த அரசு பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். எனவே 3ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சமயத்தில் டிரைவர் சீட்டுக்கு பக்கமாக உள்ள சீட்டில் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். அதனால் விபத்தினை என்னால் கண்ணாடி வழியாக நேரடியாக பார்க்கமுடியும் என்றால் சரிதான். நின்றிருந்த கன்டெய்னர் லாரிமீதுதான் பேருந்து மோதியது என்றால் சரியல்ல. அரசு பேருந்துக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த லாரி திடீரென நின்றபோதுதான் பேருந்து லாரிமீது மோதியது. நின்றுக்கொண்டிருந்த லாரிமீதுதான் பஸ் மோதியது என்றும், வழக்கிற்காகவேண்டி கண்டெய்னர் லாரி திடீரென நின்றதால்தான் விபத்து ஏற்பட்டதாக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.